*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*08 10 2025 WEDNESDAY 7.15 PM*
*ஆகாஷவாணி - செய்திகள்*

*<u>தலைப்புச் செய்திகள்</u>*

*1. மும்பை தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க அப்போதைய மத்திய அரசு தயங்கியது ஏன் என்பதற்கு காங்கிரஸ் விளக்கம் அளிக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.*

*2. பிரிட்டன் – இந்தியா இடையேயான தாராள வர்த்தக கொள்கையின் பயனாக இருதரப்பு வர்த்தக உறவுகள் வலுப்பெற்றிருப்பதாக பிரிட்டன் பிரதமர் திரு. Keir Starmer தெரிவித்துள்ளார்.*

*3. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை அனைவரும் தாராளமாக பயன்படுத்தலாம் என்று மத்திய இணையமைச்சர் திரு. ஜெயந்த் சௌத்ரி கூறியுள்ளார்*

*4. பீகார் மாநில சட்டப்பேரவை தேர்தலில் முதியோர், மாற்றுத்திறனாளிகள் தபால் மூலம் வாக்களிக்கலாம் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.*

*5. உலக ஜூனியர் கலப்புக் குழு பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*>>>>><<<<<*

*மும்பை தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க அப்போதைய மத்திய அரசு தயங்கியது ஏன் என்பதற்கு காங்கிரஸ் விளக்கம் அளிக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.*

*நவி மும்பை சர்வதேச விமான நிலையத்தை இன்று திறந்து வைத்துப் பேசிய அவர், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மூத்த தலைவர் ஒருவர், உள்துறை அமைச்சராகவும் பொறுப்பு வகித்தவர், இந்தியா பதிலடி கொடுப்பது தடுத்து நிறுத்தப்பட்டதாக கூறியுள்ளதை சுட்டிக்காட்டினார்.*

*இந்த நடவடிக்கை தீவிரவாதிகளை வலுப்படுத்தியதாகவும் பிரதமர் குற்றம் சாட்டினார்.*

*இதற்கு உரிய விளக்கத்தை நாட்டிற்கு அளிக்க வேண்டிய பொறுப்பு காங்கிரஸ் கட்சிக்கு உள்ளதாகவும் அவர் கூறினார்.*

*பிஜேபி தலைமையிலான மத்திய அரசை பொறுத்தவரை நாட்டின் பாதுகாப்பிற்கு மட்டுமே உயர் முன்னுரிமை அளித்து வருவதாக அவர் தெரிவித்தார்.*

*இதன் அடிப்படையில்தான், பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு ஆப்பரேஷன் சிந்தூர் மூலம் உரிய பதிலடி கொடுக்கப்பட்டதாகவும் பிரதமர் கூறினார்.*

*சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்களால் வரிகள் குறைக்கப்பட்டு, மக்கள் அதிக அளவில் பயன்பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார்.*

*நவராத்திரி பண்டிகையின் போது அதிக அளவில் உள்நாட்டு பொருட்கள் அதிக அளவில் விற்பனை செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.*

*இளைஞர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, அவர்களுக்கான வேலைவாய்ப்பை உறுதி செய்ய வேண்டும் என்ற நோக்கி பிஜேபி தலைமையிலான மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.*

*வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கு அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டார்.*

*>>>>><<<<<*

*ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிட்டன் வெளியேறிய பின், இந்தியாவுடன் தாராள வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருப்பது மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளதாக அந்நாட்டு பிரதமர் திரு. Keir Starmer தெரிவித்துள்ளார்.*

*அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்துள்ள அவர், மும்பையில் தொழிலதிபர்களிடையே உரையாற்றினார்.*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இந்த ஆண்டு தொடக்கத்தில் பிரிட்டன் வருகைக்கு பின்பு, இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தக உறவுகள் மேலும் வலுப்பெற்றிருப்பதாக தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் செய்து கொள்ளப்பட்ட இருதரப்பு தாராள வர்த்தக ஒப்பந்தத்தின் பயனாக, ஒட்டுமொத்த வர்த்தகம் ஆண்டுக்கு 25 புள்ளி ஐந்து பில்லியன் பவுண்ட் ஆக உயரும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அவர் கூறினார்.

ஜவுளி, மதுபான வகைகள், கார்கள் உள்ளிட்ட பொருட்களுக்கு கணிசமாக வரி குறைக்கப்பட்டிருப்பதால், இரு நாடுகளும் அவற்றின் வர்த்தகத்தில் கவனம் செலுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

இந்திய வர்த்தகத்தை பிரிட்டன் சந்தையில் ஊக்குவிக்கும் நோக்கில், பொருட்களுக்கான இறக்குமதி வரி முற்றிலுமாக ரத்து செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

ஜவுளி, தோல் பொருட்கள், காலணிகள், விளையாட்டு உபகரணங்கள், பொறியியல் கருவிகள் ஆகியவற்றின் உற்பத்தியில் இரு நாடுகளிலும் பல்லாயிரக்கணக்கில் வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் திரு. Keir Starmer தெரிவித்தார்.

>>>>><<<<<

தொழில் நுட்பத்தை பயன்படுத்தி வாழ்க்கை தரத்தை மேம்படுத்த விழையும் அனைவரும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை தாராளமாக பயன்படுத்தலாம் என்று மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் துறை இணையமைச்சர் திரு. ஜெயந்த் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

நித்தி ஆயோக் தொழில்நுட்ப பிரிவு தயாரித்த, உள்ளார்ந்த சமூக மேம்பாட்டிற்கான செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் என்ற அறிக்கையை இன்று புதுதில்லியில் அவர் வெளியிட்டு பேசினார்.

6ஆம் வகுப்பு முதல் பயிலும் மாணவ மாணவியர் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப கல்வியை ஆன்லைன் மூலமாக கற்றுக் கொள்வதற்கு வசதி செய்து தரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சமூகத்தின் அடித்தட்டு மக்கள் வரை இந்த தொழில் நுட்பத்தை கொண்டு சென்று, புதிய வாய்ப்புகளை உருவாக்குவது தான், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் வெற்றி என்றும் திரு. ஜெயந்த் சௌத்ரி குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய நித்தி ஆயோக்கின் தலைமை செயல் அதிகாரி திரு. B.V.R. சுப்ரமண்யம், இந்த தொழில்நுட்பத்தை விரைந்து நடைமுறைக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கூறினார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், உயிரி தொழில் நுட்பம், கணினி சார் தொழில்நுட்பத்தை உலக தரத்தில் நடைமுறைக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் தொழில்நுட்பம் சார்ந்த வளர்ச்சியை அனுபவிக்க வேண்டும் என்றும் திரு. B.V.R. சுப்ரமண்யம் தெரிவித்தார்.

>>>>><<<<<

நடப்பாண்டு வேதியியலுக்கான நோபல் பரிசு உலோக கரிம கட்டமைப்பு உருவாக்கம் தொடர்பான ஆய்வுக்காக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பான் நாட்டின் பேராசிரியர் Susumu Kitagawa, ஆஸ்திரேலியாவின் Richard Robson மற்றும் அமெரிக்காவின் Omar Yaghi-க்கு இந்த விருது பகிரிந்தளிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

சர்வதேச சமூக பாதுகாப்பு அமைப்பின் நடப்பாண்டுக்கான சாதனை விருது இந்தியாவுக்கு கிடைத்துள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா, பிரதமர் திரு. நரேந்திர மோடியின் சிறப்பான வழிகாட்டுதலால், அனைத்து தரப்பு மக்களுக்கும் சமூக பாதுகாப்பு கிடைத்துள்ளதாக தெரிவித்தார்.

*கடந்த 10 ஆண்டுகளில் சமூக பாதுகாப்புத்துறை மிகச் சிறப்பாக பணியாற்றியதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.*

*>>>>><<<<<*

*பீகார் மாநில சட்டப்பேரவைக்கு நடைபெறவுள்ள தேர்தலில் 85 வயதுக்கு மேற்பட்டோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் தேர்தல் பணியில் ஈடுபடுவோர், தபால் மூலம் தங்களது வாக்குகளை செலுத்தலாம் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.*

*தபால் வாக்குகளை செலுத்த தகுதியுடையவர்கள் தேர்தல் அறிவிக்கை வெளியிட்ட ஐந்து நாட்களுக்குள் தேர்தல் அதிகாரியிடமோ, வாக்குச்சாவடி அலுவலரிடமோ 12-D படிவத்தை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*தீயணைப்புத் துறையினர், மருத்துவப் பணியாளர்கள், மின்வாரிய பணியாளர்கள், போக்குவரத்து மற்றும் ஆம்புலன்ஸ் ஓட்டுநர்கள் மற்றும் நீண்டதூரம் செல்லும் அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்கள் தபால் மூலம் வாக்குகளை செலுத்தலாம் என்றும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.*

*>>>>><<<<<*

*நகரமயமாக்கல் மூலம், உள்நாட்டு உற்பத்தி, பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு பெருகி வருவதாக மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை இணையமைச்சர் திரு. Tokhan Sahu கூறியுள்ளார்.*

*புதுதில்லியில் இன்று உலக வாழ்விட தினத்தை ஒட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், அடுத்த 40 முதல் 50 ஆண்டுகளில் இந்தியாவில் நகரமயமாக்கல் அதிக அளவில் இருக்கும் என்று தெரிவித்தார்.*

*மேம்பட்ட, நீடித்த நகரமயமாக்கலால் இந்தியா வளர்ச்சிப் பாதையில் வெற்றிநடை போடுவதாகவும் திரு. Tokhan Sahu கூறினார்.*

*>>>>><<<<<*

*உலக ஜூனியர் கலப்புக் குழு பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*குவஹாத்தியில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா இன்று ஐக்கிய அரபு எமிரேட்ஸை வென்றது.*

*>>>>><<<<<*

*ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி இளையோர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.*

*Mackay-ல் நடைபெற்ற இப்போட்டியின் இரண்டாம் நாளான இன்று, 7 விக்கெட் இழப்புக்கு 144 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் முதல் இன்னிங்ஸை தொடர்ந்து ஆடிய இந்தியா, 171 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.*

*இதனையடுத்து, 2வது இன்னிங்ஸை ஆடிய ஆஸ்திரேலியா 116 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.*

*பின்னர், 81 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய இந்தியா, 3 விக்கெட் இழப்புக்கு 84 ரன் எடுத்து வெற்றிபெற்றது.*

*இரண்டு போட்டிகளைக் கொண்ட இந்த தொடரை, இரண்டு ஆட்டங்களிலும் வெற்றிபெற்று இந்தியா கைப்பற்றியது.*

*>>>>><<<<<*

*டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் ஆல்ரவுண்டர் பிரிவில் இந்தியாவின் ஜடேஜா தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார். வாஷிங்டன் சுந்தர் 11வது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.*

*>>>>><<<<<*

*சிட்னி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் மோகன் குமார் - ரிது வர்ஷினி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.*

*கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில், இந்த இணை 15-10, 17-15 என்ற செட்கணக்கில் நியூஸிலாந்தின் Raphael Chris Deloy - Yanxi Liu இணையை வென்றது.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவில் மரியசாமி மற்றும் Alap Mishra இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.*

*>>>>><<<<<*

*Squash போட்டிகளுக்கான சர்வதேச தரிவரிசை பட்டியலில் இந்தியாவின் Abhay Singh, 29வது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.*

*>>>>><<<<<*

*சீனாவில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - சீன தைபேயின் Jason Jung இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*>>>>>END<<<<<*